[2014 பிப்ரவரி 17

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், திருமலைராஜபுரத்தில் இயங்கிவரும் அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை, அப்பள்ளி இருக்கும் பகுதியிலுள்ள ஆதி திராவிடர் மக்கள் நலன் கருதி, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, உத்தரவு பெற்று மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திடத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

61—

விரைவுப் பேருந்து வசதி

***7685—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, வந்தவாசியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டு, வந்தவாசி தொகுதியில் மட்டும் 9 புதிய வழித்தடப் பேருந்துகளும், 8 பேருந்துகள் வழித்தடம் நீட்டிப்பும் செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா

2014 பிப்ரவரி 17]

அவர்களின் உத்தரவைப் பெற்று வந்தவாசியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

திரு. வே. குணசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள் போற்றிடும் முத்தான திட்டங்களைத் தந்து, வல்லரசு பெற்றிட நல்லரசு தந்த, தங்கத் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வந்தவாசி தொகுதியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

62—

24 மணிநேர மருத்துவமனை

***24753—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.